**O.S.No.120/2018**

**DW1 : வெங்கடேசன்** **தேதி 04.02.2026**

**பி.சா.1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.சா.ஆ.32 முதல் 54 வரையான ஆவணங்கள் அனைத்தும் நான் இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போதே என் கை வசம் இருந்த ஆவணங்கள் என்றால் சரிதான். வாதி தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்த பிறகு அந்த குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மேற்படி ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1985 ல் எல்.ஐ.சி. பாலிசி இருந்ததாக பி.சா.ஆ.34 தாக்கல் செய்திருக்கிறேன். அப்போது நான் இளவர். அதே வருடத்தில் வா.சா.ஆ.33 கால கட்டத்திலும் நான் இளவர்தான். பி.சா.ஆ.34 ல் என் தாயார் ராஜலட்சுமி எனக்கு அடுத்த சிநேகிதியாக உள்ளார். பி.சா.ஆ.33 ல் பாதுகாவலராக யாரையும் காட்டவில்லை என்றால் ஆம் காட்டப்படவில்லை. பி.சா.ஆ.33, 34 ல் எல்.ஐ.சி நிறுவனத்தின் முத்திரை இல்லை என்றால் சரியல்ல. அது எல்.ஐ.சி.யால் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறேன். பி.சா.ஆ.34 தாராபுரம் கிளையிலும் பி.சா.ஆ.33 ஈரோடு கிளையிலும் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணங்களும் வெவ்வேறு கிளையில் போடப்பட்டது.